ஏற்போர் 'ஆம் என்க— (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க— (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (24—3—1992) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

31. 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப் பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகளின் மூலமாகத் தொலைக் காட்சிப்பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 11—11—1991-ஆம் நாளிட்ட 1682-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப் பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் மற்றும் கம்பிவடத் தொலைக் காட்சி அமைப்புக் கோவைகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7!1984) 22(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

32. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1989—90-ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

33. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்)மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

35. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1991—92.

36. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்1 முதல் 50 வரை).